


- வாழ்வோம்

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்களில் மக்களின் மனநிலை, களநிலவரங்களுக்கு எதிராகச் சில ஊடகங்கள் மடைமாற்றும் வகையில், நடந்துகொள்வதை சமூக வலைதளங்களில் பலரும் விமர்சித்து வருகின்றனர். ரா.செந்தில்குமார் என்கிற உடன்பிறப்பு எழுதியுள்ளது கவனிக்கவைக்கிறது. அவரது பதிவிலிருந்து...

``நேற்றிலிருந்து நிறைய பேர் இளந்தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, ஆதவ் அர்ஜுனா சவால் விட்டதுக்குப் பதில் சொல்லிக்கிட்டு இருக்கின்றனர். கொஞ்சம் எல்லாரும் ரிலாக்ஸ் ஆகவும். ஆதவ் அர்ஜுனாவோட பிரச்சினை நம்ம அண்ணன் கிடையாது. அவங்க கட்சிக்குள்ள இருக்கக்கூடிய பல பவர் சென்டர்களுக்குள்ள நடக்கிற போட்டி.

அறிவாலயத்தின் அரணாக நிற்போம்!

அதில் முக்கியமான சவால், இந்த எலெக்ஷன்ல அவருக்கு சவாலாக இருப்பது ஜான் ஆரோக்கியசாமி அண்ட் டீம்.

இந்த அரசில், விஜய் ஒரு டம்மி பவர் சென்டர்தான். தவிர, நிறைய பவர் சென்டர்கள் உள்ளுக்குள்ள இருக்குது.

உண்மை என்னன்னா, பா.ம.க.வ எப்படியாவது கூட்டணிக்குள்ள கொண்டு வரணும்னு ஜான் ஆரோக்கியசாமி அண்ட் கோ, `மாஸ்டர் பிளான்' போடுது. வி.சி.க.வைக் கூட்டணிக்குள்ள தக்கவச்சுக்க ஆதவ் அண்ட் கோ தண்ணி குடிச்சிக்கிட்டு கிடக்கு. த.வெ.க. அரசுக்குள்ள இருக்கக்கூடிய இந்த பவர் சென்டர்களின் பகீரதப் பேயாட்டங்களைப் பத்தி எழுதணும்னா, சிறப்பு மலரே வெளியிடலாம். ஆனா, எதுவுமே நடக்காதது மாதிரி, பூனை கக்கூஸ் போய் மண்ணை மூடி மேலே ஏறி உட்கார்ந்துக்கிட்டு, அமைதியா இருக்கிற மாதிரி மவுனமா கிடக்குது மொத்த ஊடகமும். இருந்துட்டுப் போகட்டும். இந்த தமிழ்நாட்டுல ஒரே ஒரு அரசியல் நடக்கிறது. தி.மு.கழக ஆதரவு நிலை. தி.மு.கழக எதிர்ப்பு நிலை அவ்வளவுதான். நாம எப்பவும் நம்ம நிலையில தெளிவா நிப்போம் ... அறிவாலயத்துக்கு அரணா இருப்போம்" என்று பதிவிட்டுள்ளார்.

ஃப்ளாஷ்பேக்



தலைவரும் இனமானப் பேராசிரியரும்

2001-ஆம் ஆண்டு எழும்பூர் தொகுதியில் வென்ற, மறைந்த பரிதி இளம்வழுதி, பொய்வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டார். அந்த வழக்கில் சிறையில் இருந்து வெளியே வந்த அவர், கழகத் தலைவரையும் இனமானப் பேராசிரியரையும் சந்தித்து வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். அந்தத் தருணத்தில், கழக நிர்வாகிகள் ஜெ.கிருஷ்ணமூர்த்தி, ஆ.நித்தியராஜ், மா.தனசிங், தன.இளங்கோவன் ஆகியோருடன் நானும் இருந்தேன்.



எம்.இ.தேவநிதி

- எம்.இ.தேவநிதி,
தலைமைக் கழகப் பேச்சாளர்,
எழும்பூர், சென்னை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

அன்று 'காங்கிரஸ்வாலா', இன்று 'த.வெ.க.வாலா!'



தமிழ்நாட்டில், தற்போது அமைந்துள்ள த.வெ.க. ஆட்சியை, '1967-ஐ போல' என ஆரம்பித்து விளிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறார், முதல்வர் விஜய். 1967-ஐ போல என்று சொல்ல வேண்டுமென்றால், அண்ணாவைப் போல அறிவு வேண்டும், ஆற்றல் வேண்டும், சிந்தனை வேண்டும், செயல்பாடு வேண்டும். இலட்சிய உறுதிகொண்ட இலட்சோப இலட்சம் தம்பிகளை உருவாக்கிய படைத்தளபதிக்கான ஆளுமை வேண்டும். ஆனால், அறிவுக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம் என்ற நிலையை நோக்கி த.வெ.க. தொண்டர்களை உருவாக்கியிருப்பவர், ஆளுமைத்திறனற்ற விஜய்.

'சிந்திக்கத் தெரிந்தவர்கள் தன் பின்னால் வர மாட்டார்கள்' என்பதற்காகவே தன் நடனத்தைப் பார்த்து, நடிப்பைப் பார்த்து ரசித்து விசிலடித்த கூட்டத்தை அணி திரட்டியிருக்கிறார். மக்கள் மனத்தை மாற்றும் மயக்கவாத சொற்களை வானளாவிய பொய்களால் கோர்த்து ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் கைபேசிகள் வழியாகக் கொண்டுசேர்த்துவிட்டால் போதும், செயல்பாட்டுக்கு அவசியமே இல்லை என்பதை மெய்ப்பித்து இருக்கிறார் விஜய்.

இலட்சியத்திற்கு அர்த்தம் தெரியாத இலட்சணத்தில்தான் ஒட்டுமொத்த கட்சியும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பொது ஒழுங்கும் தெரிவதில்லை, சட்டமும் தெரிவதில்லை, சமூகத்தைப் பற்றி சிந்திக் கும் அக்கறையும் இல்லை. எனவே, இந்த ஆட்சியை 1967-இல் நடந்ததைப் போன்ற 'மாற்றம்' என விளிக்காமல், இன்னும் கொஞ்சம் பின்னோக்கிச் சென்று, 1937-இல் நடந்ததைப் போல என விளித்தால், பொருளுடையதாக இருக்கும். தற்போது நடக்கும் அன்றாடக் கூத்துகளுக்குப் பொருத்தமாகவும் இருக்கும். அந்தக் காலகட்டத்தைத் தனது 'காங்கிரஸ் வாலா' நாடகத்தின்மூலம் மிக எளிமையாக விளக்கியிருக்கிறார் அண்ணா. 10-04-1938-இல் 'குடிஅரசு' இதழில் பதிவாகி இருக்கும் இந்நாடகம், இன்றைய சூழலுக்கும் பல வகையில் மிகப்பொருத்தமாக இருக்கிறது.

"எல்லாம் சூத்திர ராஜ்ஜியமாக இருக்கிறது. பெரிய உத்தியோகம் அவர்களுக்கே போகிறது. இங்கிலீஷ் படிப்பிலே, அந்தப் பயல்கள் மணிகளாகிவிட்டனர். மந்திரி சபை அவர்களிடம். என்றைக்குத்தான் நமது ஆட்சி வருமோ" என்று, அன்றைக்கு 'நீதிக்கட்சி'யின் ஆட்சியில் காங்கிரஸ்காரர்களின் புலம்பல் என்னவாக இருந்தது என்பதிலிருந்து நாடகம் தொடங்கியது.

"தேச மகாஜனங்களே! இந்தப் பாழாய்ப் போன புதிய சீர்திருத்தத்தை உடைக்க வேண்டும். இல்லாவிட்டால், நமது கதி அதோகதிதான். ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டு கொடுத்தால், மறுபடி மந்திரிகளாகி, தேசத்தைப் பாழாக்கி, சீர்திருத்தத்தை நடத்துவார்கள். "நாங்கள் சென்றால், 'வரிகளை ஒழிப்போம்', 'நில வரியைப் பாதிக்கு மேல் குறைப்போம்', 'வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவோம்'. 'ஜஸ்டிஸ் கட்சி ஒழிந்தால், தேசத்தில் தேனும் பாலும் ஓடும்'. ஆகவே, அன்பர்களே! எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்பதுதான், அன்றைக்கு காங்கிரஸின் பிரச்சாரம் என்பதை வசனங்களில் விளக்குகிறார் அண்ணா.

கண்ணை மூடிக்கொண்டு இந்த வசனத்தை இன்றைக்குக் கேட்டால், இந்த பிரச்சாரத்தைச் செய்தது காங்கிரஸா அல்லது த.வெ.க.வா? அவர்கள் திட்டியது நீதிக்கட்சியையா அல்லது தி.மு.க.வையா? என்ற சந்தேகம் எவருக்கும் வரத்தான் செய்யும். 'ஜஸ்டிஸ் கட்சி ஒழிந்தால், தேசத்தில் தேனும் பாலும் ஓடும்' என்ற காங்கிரஸின் அன்றைய பிரச்சாரத்தை இன்றைக்கு 'தி.மு.க. ஒழிந்தால்' என மாற்றிக் கொண்டது த.வெ.க.

"ஏ! ஜஸ்டிஸ் மந்திரிகளே, நில வரிக் கொடுமையால் மக்கள் துடி துடிக்கிறார்கள்; வதைபடுகிறார்கள். எங்கும் பட்டினி, பஞ்சம், பிணிதான் தாண்டவமாடுகிறது" என்று அன்றைக்கு சட்டமன்றத்தில் பேசியது காங்கிரஸ். ஆனால், "கண்ணியமிக்க காங்கிரஸ் வாதியே! இப்போது நடப்பது இரட்டை ஆட்சிதானே? நிலவரியைச் சட்ட சபையின் இஷ்டப்படி குறைக்கும் அதிகாரம் எங்களிடம் இல்லையே" என்று நீதிக்கட்சி விளக்கியது. "முடியாவிட்டால், வெளியே போ! ராஜினாமா செய்" என்றெல்லாம் முட்டாள்தனமாக வாதிட்டது காங்கிரஸ். ஆனால், அத்தகைய காங்கிரஸ் கட்சி அடுத்து ஆட்சிக்கு வந்தவுடன், "பணமில்லை, ஆசை இருக்கிறது" என்று பல்டி அடித்ததைத் தனக்கே உரிய பாணியில் கிண்டலான வசனங்களால் அழகாக விவரித்திருப்பார் அண்ணா.

02

பேரறிஞர் பேனா

"என்னய்யா இது! நிலவரியைச் சரியாகக் குறைப்பதாகச் சொன்னீர்களே" என்று நீதிக்கட்சி உறுப்பினர் கேட்கும் போது...

"பச்சை ஒணான் இருக்கிறதே, தெரியுமோ? அது அவ்வப்போது நிறத்தை மாற்றிக்கொள்ளும். அதைப் போல நாங்கள் அவ்வப்போது ஒவ்வொரு விதமாக நடப்போம். அதை ஏன் செய்ய வில்லை, இதை ஏன் செய்தாய்

இலட்சியத்திற்கு அர்த்தம் தெரியாத இலட்சணத்தில்தான் ஒட்டுமொத்த கட்சியும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பொது ஒழுங்கும் தெரிவதில்லை, சட்டமும் தெரிவதில்லை, சமூகத்தைப் பற்றி சிந்திக்கும் அக்கறையும் இல்லை.

என்று கேட்க வேண்டாம்" என்று காங்கிரஸ் உறுப்பினர் பதிலளிக்கும் வண்ணம் நாடகத்தின் நிறைவுப்பகுதி இருக்கும்.

அன்றைக்கு காங்கிரஸ் அடித்த பல்டிகளைவிட, பல நூறு மடங்கு அதிகமான பல்டிகளை, இப்போது அடித்துக்கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு. விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்வோம் என்று பிரச்சாரத்தில் சொன்னவர்கள், இன்றைக்கு, 'முழுத்தள்ளுபடிக்கு வாய்ப்பே இல்லை, ஆர்.பி.ஐ. விதிகள் தெரியாதா?' என்று 'காங்கிரஸ் வாலா'க்களைப் போல மழுப்புகிறார்கள். 'ஆண்டுக்கு 6 சிலிண்டர்கள் இலவசம்' என்றவர்கள், இப்போது மூன்றுடன் முடித்துக்கொண்டார்கள். அதுவும் இன்னும் நடைமுறைக்கு வந்தபாடில்லை. அன்றைக்கு மது விற்பனையில், பாட்டிலுக்கு 10 ரூபாய் வாங்குகிறார்கள் என்பதைப் பாட்டாகவே பாடினார்கள். ஆனால் இப்போது, அது பராமரிப்புச் செலவு என்றாகிவிட்டது. 10 ரூபாயும் இப்போது 20 ரூபாய், 30 ரூபாயாக அதிகரித்துவிட்டது.

'பணமில்லை, ஆசை இருக்கிறது' என்று அன்றைக்கு காங்கிரஸ் சொன்னதைத் தான் இன்றைக்கு 'கஜானா காலியாகிவிட்டது' என 'அப்டேட்' செய்துகொண்டார்கள். அன்றைக்கு ராஜாஜி அரசு இந்தித் திணிப்பைத் திட்டமாக அறிவித்து, நடைமுறைப்படுத்தியது. இன்றைக்கு த.வெ.க. அரசோ நவோதயா, சி.பி.எஸ்.இ. பள்ளிகளைப் பெருக்கி, இந்தித் திணிப்பை மறைமுகமாக நடைமுறைப்படுத்த எத்தனிக்கிறது. எதிரிகளுக்கு எப்போதும் 'இரட்டை நாக்கு' என்பதை, அப்போதே தோலுரித்துவிட்டார் அண்ணா. அண்ணாவைக் கொள்கைத் தலைவர் என்று சொல்லி, நாடகமாடும் நவீன எதிரிகளை அம்பலப்படுத்தவும் இந்த நாடகங்களே போதுமானவை. அன்று 'காங்கிரஸ்வாலா' படைத்தவர் இன்று இருந்தால், 'த.வெ.க. வாலா' தந்திருப்பார்.

...தொடரும்


ர.பிரகாசு

தெரிந்து கொள்வோம்

19-7-1962

விலைவாசி உயர்வை எதிர்த்துப் போர்!

உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தைத் தடுக்கத் தவறிய அரசைக் கண்டித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் அறிவித்தது கழகம். வட ஆற்காடு மாவட்டத் தலைநகரான வேலூரில், பேரறிஞர் அண்ணா தலைமையில், 20,000 பேர் ஊர்வலமாக வந்தனர். அண்ணாவைக் கைதுசெய்ததுடன், கூட்டத்தைக் கலைக்க தடியடி நடத்தப்பட்டது. போலீஸார் வானத்தை நோக்கி பலமுறை சுட்டனர்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900